**Deposition of witness**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR**

| | | |
|---|---|---|
| O.S.No. | : | |
| Deposition of Witness for | : | |
| Court | : | District Munsif Court, Melur. |
| Name | : | |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of  of the 22$^{th}$ day of september 2025

22.09.2025

O.S.No.72/2011

வா.சா.1.திரு.அப்பாஸ்அலி த.பெ. அப்துல் ராவுத்தர்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. எனது தகப்பனார் பெயரில் ஆன 17.09.1995 ம் தேதிய கிரைய ஆவணம் எண்.1475/1995 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது பெயரில் ஆன தான செட்டில்மெண்டு பத்திரம் ஆவண எண்.3863/2005 அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் பிரதிவாதி பெயரில் ஆன தான செட்டில்மெண்டு பத்திரம் ஆவண எண்.3862/2025 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ம் பிரதிவாதி பெயரில் ஆன தான செட்டில்மெண்டு பத்திரம் ஆவண எண்.3861/2025 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4**ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3ம் பிரதிவாதி பெயரில் ஆன தான செட்டில்மெண்டு பத்திரம் ஆவண எண்.3860/2025 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.காதர் ஜான் பெயரில் ஆன தான செட்டில்மெண்டு பத்திரம் ஆவண எண்.3859/2025 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.07.2006 தேதிய பட்டா மாறுதல் உத்தரவு அசல் **வா.சா.ஆ.7**ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது மனைவி மேலூர் காவல் நிலையத்தில் கொடுத்த

புகார் மனுவின் கை நகல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் மனு ரசீது எண்.179/11 அசல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட புகார் மனு விசாரணை சம்மந்தமாக நடவடிக்கைகள் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் அதனுடன் இணைந்த ஆவணங்கள் **நீ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குபடி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

/ஒப்பம்/
(திரு.P. மகாராஜன்.,எம்.எல்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.